RM2

**இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2025**

10 - ஆம் வகுப்பு

**சமூக அறிவியல்**

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

I **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 14 X 1 = 14
**கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. உலகத்தின் எந்தப் பகுதி பாலர் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
அ) ஐரோப்பா ஆ) லத்தீன் இ) இந்தியா ஈ) சீனா

2. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன் முயற்சி எடுத்தவர் யார்?
அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின் இ) உட்ரோவில்சன் ஈ) பால்டுவின்

3. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?
அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936

4. 1709-இல் தரங்கம் பாடியில் ..................... ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ் இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரனார்.

5. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்

6. **கூற்று** : தமிழ்நாடு தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை
**காரணம்** : இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவு பிரதேசத்தில் உள்ளது.
அ) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு

7. மிக அதிகமாக கிடைக்கக் கூடிய ஆற்றல் வளம் ............. .
அ) உயிரி சக்தி ஆ) சூரியன் இ) நிலக்கரி ஈ) எண்ணெய்

8. மாங்குரோவ் காடுகள் பாதுகாப்பது ...................... . அ) கடற்கரைப் பகுதிகளை கடல் அரிப்பிலிருந்து
ஆ) பவளப் பாறைகள் இ) கடலோர புல்வெளிகளை ஈ) இவையனைத்தும்

9. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356 இ) சட்டப்பிரிவு 36 ஈ) சட்டப்பிரிவு 368

10. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.
இந்தியா மற்றும் மியான்மரின் கலடன் போக்குவரத்துத் திட்டம் பின்வரும் போக்குவரத்து முறைகளில் எந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது?
1) சாலை 2) ரயில்வழி 3) கப்பல் 4) உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து
அ) 1,2 மற்றும் 3 ஆ) 1,3 மற்றும் 4 இ) 2,3 மற்றும் 4 ஈ) 1,2,3 மற்றும் 4

11. மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுபவர் யார்?
அ) குடியரசுத் தலைவர் ஆ) ஆளுநர் இ) பிரதமர் ஈ) முதலமைச்சர்

12. .................. முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும் போது இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.
அ) செலவு முறை ஆ) மதிப்பு கூட்டுமுறை இ) வர்த்தகம் ஈ) வங்கி

13. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?
அ) அமைச்சரவை ஆ) தலைமை இயக்குநர்
இ) துணை தலைமை இயக்குநர் ஈ) இவற்றில் எதுவுமில்லை

14. ..................... இல் வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது.
அ) ஓசூர் ஆ) திண்டுக்கல் இ) கோவில்பட்டி ஈ) திருநெல்வேலி

**பகுதி – II**

**குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 10 X 2 = 20

15. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?
16. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

17. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?
18. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
19. இந்தியாவின் வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.
20. நம்நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு வரைக.
21. கடல் பாதுகாப்பு மேலாண்மையில் சதுப்பு நில தாவரங்களின் பங்கினை குறிப்பிடுக.
22. செம்மொழி தகுதி பெற்ற இந்திய மொழிகள் யாவை?
23. உயர்நீதி மன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீ புரிந்து கொண்டதென்ன?
24. சார்க் உறுப்பு நாடுகளை பட்டியலிடுக.
25. உலகமயமாக்கலை சார்ந்த சீர்திருத்தங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக.
26. பசுமைப் புரட்சியின் விளைவுகள் என்ன?
27. விகித வரிவிதிப்பு முறை என்றால் என்ன?
28. படிக்கட்டு முறை வேளாண்மை பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண். 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 10 X 5 = 50

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
 1) ................ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும்.
 2) ................ ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
 3) .................. ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
 4) இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு, நாள் .................. .
 5) சாத்தனூர் அணை ................ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
31. சீனாவை ஒரு பொதுவுடமை நாடாக்க மா.சே.துங்கின் பங்களிப்பை அளவிடுக.
32. இந்தியாவின் பிரிவினைக்கு பின்னால் இருந்த காரணங்களை விவரிக்கவும்.
33. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு மண்ணின் பண்புகள் மற்றும் பரவலைப் பற்றி விவரி.
34. **அ) வேறுபடுத்துக.** i) மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரை சமவெளி.
 ii) சாலை வழி போக்குவரத்து மற்றும் இரயில் வழி போக்குவரத்து.
 **ஆ) காரணம் கூறுக.:** விவசாயிகள் இரசாயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள். ஏன்?
35. தமிழ்நாட்டின் கனிம பரவலை விவரி.
36. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
37. இந்திய குடியரசு தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி.
38. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி.
40. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகளை விவரி.
41. **கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.**
 1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் வரைக.
42. **இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.**
 1) தண்டி 2) மதராஸ் 3) பராக்பூர் 4) ஜாலியன் வாலாபாக் 5) மீரட்

## பகுதி - IV

**குறிப்பு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 X 8 = 16

43. 1857-ம் ஆண்டு பெருங்கலகம் தோல்வியடைய காரணங்களையும் அதன் பின் விளைவுகளையும் ஆராய்க. ***(அல்லது)***
 தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.
44. **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைப்படத்தில் கீழ்காணும் இடங்ளை குறிக்கவும்.**
 1) கங்கை நதி 2) மவுண்ட் K2 3) கிழக்கு தொடர்ச்சிமலை 4) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை 5) மன்னார் வளைகுடா 6) மாங்குரோவ் காடுகள் 7) மேட்டூர் அணை 8) தேயிலை விளையும் பகுதி
 ***(அல்லது)*** **ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.** 1) சோழ மண்டலக் கடற்கரை 2) பாக் ஜலசந்தி 3) சென்னை 4) நீலகிரி 5) நெல் விளையும் பகுதி 6) வேதாரண்யம் 7) வேடந்தாங்கல் 8) அகத்திய மலை



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com